### போதை அமைச்சர் தாம்பரம் கில்லி சரத்தை பதவி நீக்கக் கோரி

# தாம்பரத்தில் தடையை மீறி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 6 ஆயிரம் தி.மு.க.வினர் கைது!

## முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் – வீரமணி ஜெயக்குமார் – எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி உள்ளிட்டோர் கைது!

தாம்பரம், ஜூலை 3-

பொது இடத்தில் போதைப் பொருளை பயன்படுத்திய த.வெ.க. அமைச்சர் - தாம்பரம் சட்டமன்றத் உறுப்பினர் தாம்பரம் கில்லி சரத் என்கிற சரத்குமாரைக் கண்டித்து - அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க கோரியும் காஞ்சிபுரம் வடக்கு மாணவர் அணி சார்பில் தாம்பரம் சண்முகம் சாலையில் காவல்துறை விதித்த தடையை மீறி லாரியில் மேடை அமைத்து நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கங்களை எழுப்பிய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநில மாணவர் அணி செயலாளர் திருமதி. வீரமணி ஜெயக்குமார், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச்செயலாளர் இ.கருணாநிதி உள்ளிட்ட 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்தனர்.

தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் - த.வெ.க. அமைச்சர் கில்லி சரத் என்கிற டி. சரத்குமார் பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியதைக் கண்டித்து, அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வலியுறுத்தியும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி - இளைஞர் அணி சார்பில் நேற்று மாலை தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா தலைமையிலும்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரையிலும் மிகவும் எழுச்சியாக நடைபெற்றது.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கலாநிதி குணாளன், எஸ்.ஜெகதீப், ஜெகன் தேவேந்திரன், வே.சங்கீதா, மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் குட்டி (எ) தினேஷ், லோ.இலக்கியா, ஆ.செந்தில்குமார், ஆர்.ஜோஷ்பிரபு, எம்.இளவரசன், சி.ப.வினோத்குமார், இரா.முரளிதரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி. விஜயகுமார், டி.கே.கமலக்கண்ணன், கோ.ஜானகிராமன், ப.ராமமூர்த்தி, வி. தினேஷ், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் வீ,கார்த்திக், ச.ராஜேஷ், வே.சிவசுப்பிரமணி யம், ச.பிரபு, ஜெ.இன்சமாம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.



பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய அமைச்சர் கில்லி சரத்தை பதவி நீக்க வலியுறுத்தி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி இளைஞர் அணி சார்பில் எஸ்.ஆர்.ராஜா தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக மாணவர் அணி செயலாளர் திருமதி.வீரமணி ஜெயக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி உள்ளிட்ட 6000க்கும் மேற்பட்ட கழகத்தினர் பங்கேற்று கைது ஆனார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுத்து நேற்று இரவு காவல்துறை தடை விதித்தது. தடையை மீறி நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு மேடை - ஒலி பெருக்கி அமைக்கப்பட்டது.

அதற்கு காவல் துறையினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து மேடையையும் ஒலி பெருக்கியையும் அகற்றினார்கள், இரும்பு கழக கொடிக் கம்பங்களை மட்டும் அப்படியே விட்டு விட்டனர்.

தாம்பரம் சண்முகம் சாலையில் நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க சாரியாக அணி வகுத்து வந்தனர். மாலை 4.30 மணியளவில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தினரும், இளைஞர் அணியினரும் மாணவர் அணியினரும் திரண்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க பெருங்கூட்டம் திரண்டவுடன் முதலில் கை ஒலி பெருக்கியை கொண்டு வந்து பேசி கழகத்தினரை ஒருங்கிணைத்தனர் காவல்துறை அந்த கை ஒலி பெருக்கியை பிடுங்க முயன்றனர்.

அதற்குள் சண்முகம் சாலையின் ஓரமாக நிறுத்தப்பட்டி ருந்த லாரியை திடீரென கொண்டு வந்து நிறுத்தி அவசர மேடை அமைக்கப்பட்டது. தயாராக வைத்திருந்த கண்டன ஆர்ப்பாட்ட பேனரை மேடையின் பின்புறம் வைத்தனர்.

காவல் துறையினர் லாரியை மடக்க முயன்றனர். மேடை பின்புற பேனரையும் ஒலி பெருக்கியையும் வைக்க விடாமல் தடுத்தனர். காவல் துறையினரையும் மீறி கண்டன ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

கழக மாணவர் அணி செயலாளர் திருமதி. வீரமணி ஜெய க்குமார், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர்

நாடகமா நாடகமா
போதை ஒழிப்பு எல்லாம் நாடகமா
பதவி நீக்கு பதவி நீக்கு
போதை பொருள் அமைச்சரை
உடனடியாக பதவி நீக்கு
கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம்
நடவடிக்கை எடுக்காத தவெக அரசை கண்டிக்கிறோம்
கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம்
நடவடிக்கை எடுக்காத
ரீல்ஸ் அரசை கண்டிக்கிறோம்
நீக்கிடு நீக்கிடு
போதை அமைச்சரை நீக்கிடு
நடவடிக்கை எடு நடவடிக்கை எடு
உடனடியாக நடவடிக்கை எடு
கைது செய் கைது செய்
போதை அமைச்சரைக் கைது செய்

உள்ளிட்ட கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, டி.மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், வி.என்.பி.வெங்கட்ராமன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தாம்பரம் ஆதிமாறன், க.அன்புச்செல்வன், ஜி.சி.அன்புச்செழியன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் இரா. பொன்னுராம், அ.தமிழ்மா றன், சாய் ஜெய்காந்த் பாரதி, ஆர்.எஸ்.கிருத்திகா தேவி,

ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, நா.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம், ஜி.கே. விவேகா னந்தன் (எ) ரவி, எம்.டி.லோகநாதன், கே.பி.ராஜன், இ.மணி, நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி. கார்த்திக், ஆர்.சதிஷ்குமார், த. வினோத்குமார்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ. எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், எம். ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், க.தேவேந்திரன், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ்,எம்.செல்வகுமார், மா.கணே ஷ்பாபு, செ.அருள்தேவி,இரா. பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு மற்றும் எம்.கஜா (எ) கஜேந்திரன், செங்கல்பட்டு குமரசாமி, துரை.சண்முக மணிகண்டன், மனோகரி சண்முக மணி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

தாம்பரம் மாநகர நிர்வாகிகள் இரா.நரேஷ் கண்ணா, பொன்.சதாசிவம், வ.விஜயரங்கன் மற்றும் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், மாவட்ட - மாநகர கழக அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு - கிளைக் கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி நிர்வாகிகள், மாநகர வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழகத்தினரை காவல் துறையினர் கைது செய்தனர்.

காவல் துறையினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற கழகத்தினரை கட்டுப்படுத்த முடியாமல் திணறினா ர்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தால் தாம்பரம் மாநகரமே போக்குவரத்து நெரிசல் மிகுந்து திக்கு - முக்காடியது.

காவல் துரையின் தடையை மீறி கண்டன ஆர்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதற்காக இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கைதான கழகத்தினர் அனைவரையும் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

முடிவில் தாம்பரம் மாநகர மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக் மற்றும் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள்.

---

### விபிஜி ராம்ஜி திட்டம் : மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரிப்பதால்

# ஒன்றிய அரசிடம் வலுவான எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்!

## த.வெ.க. அரசுக்கு முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!



சென்னை, ஜூலை 3 -

“விபிஜி ராம்ஜி திட்டம் மாநிலங்களின் நிதிச் சுமையை அதிகரிக்கும் என்பதால் ஒன்றிய அரசிடம் வலுவான எதிர்ப்பை த.வெ.க. அரசு தெரிவிக்க வேண்டும்” என்று முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.

மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு வி.பி.ஜி ராம் ஜி திட்டம் என பெயர் மாற்றம் செய்த திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த த.வெ.க. அரசுக்கு விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதிச்சட்டத்தை ரத்து செய்து அதற்கு பதிலாக வி.பி. ஜி.ராம்ஜி என்ற புதிய திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. இந்த திட்டத்திற்கு த.வெ.க. அரசு எதிர்ப்பு தெரிவிக்கமால், அமல்படுத்தப்படும் என அரசாணை வெளியிட்டது. இது பல்வேறு தரப்பினர் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய அரசின் செயலுக்கு த.வெ.க. அரசு துணை போவதுடன் தொழிலாளிகளை வஞ்சிப்பதாக தெரிவித்தனர். மேலும், இந்த திட்டத்தில் உள்ள குளறுபடிகள் குறித்து த.வெ.க. அரசுக்கு எதுவும் தெரியவில்லை எனவும், மாநிலங்களுக்கான நிதி சுமையை அதிகரிக்க ஒன்றிய அரசு முயற்சிப்பதாகவும், 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்க பாஜக துடிப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் (MGNREGA) செயல்படுத்தப்பட்டபோது, மாநிலங்களின் நிதிச் சுமை கட்டுக்குள் இருந்தது. ஆனால் தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள VBG RAMG திட்டத்தின் மூலம், மாநில அரசுகள் மீது கூடுதல் நிதிப் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன.

கூட்டாட்சியின் அடிப்படை நோக்கமான ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் பொறுப்புகளை நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக, மாநிலங்களின் நிதிப் பங்களிப்பை அதிகரித்திருப்பது மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நிதி மேலாண்மையின் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தும். இது மாநிலங்களின் நிதிச் சுயாட்சியை மேலும் பலவீனப்படுத்தும்.

மாநிலங்களின் நிதிச் சுமையைக் கணிசமாக அதிகரிக்கும் இந்தத் திட்டத்தை எந்தவித எதிர்ப்புமின்றி செயல்படுத்த முனைந்தால் தமிழ்நாட்டின் நிதி நலன்களையும் மாநில உரிமைகளையும் பாதுகாக்கத் தவறியதாகவே அமையும். எனவே, மாநிலத்தின் நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அம்சங்கள் குறித்து ஒன்றிய அரசிடம் வலுவான எதிர் நிலைப்பாட்டை தவெக அரசு எடுக்க வேண்டும்!

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.




புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மறமடக்கி ஊராட்சியில் MCC இளைஞர்களால் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டி நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சுழற்கோப்பை மற்றும் கேடயங்களை வழங்கினார்.

---

### சமாஜ்வாதி கட்சித் தலைவர்

# அகிலேஷ் யாதவ் பிறந்த நாள்!

## உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 3-**

**சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.**



அதில் உங்களுக்கு என் இதயமார்ந்த வாழ்த்துக்கள் என்றும், அரசியல் சட்டம், ஜனநாயகம் மற்றும் சமூக நீதி ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உங்களின் அசைக்க முடியாத செயல்கள் நாடு முழுவதும் உள்ளவர்களை ஈர்க்கிறது என்றும், நீங்கள் நல்ல உடல் நலத்துடனும், மகிழ்வோடும், அனைத்து முயற்சிகளிலும் தொடர்ந்து வெற்றி அடையவும் வாழ்த்துகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

### புதிய குடும்ப அட்டை விண்ணப்பங்களுக்கு

# சமையல் எரிவாயு இணைப்பு சான்று கட்டாயம் என்ற நிபந்தனையை தளர்த்த வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் - பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா வலியுறுத்தல்!


சென்னை, ஜூலை 3 -

தமிழகத்தில் புதிய குடும்ப அட்டை பெற விண்ணப்பிப்பவர்கள், சமையல் எரிவாயு உருளை (கேஸ் சிலிண்டர்) இணைப்பு பெற்றுள்ளதற்கான சான்றை கட்டாயமாக இணைக்க வேண்டும் என்ற அறிவிப்பு பொதுமக்களிடையே கடும் அதிருப்தியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது நாடு முழுவதும் சமையல் எரிவாயு உருளை தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், பெரும்பாலான எரிவாயு முகமைகள் புதிய இணைப்புகளை வழங்க முடியாத சூழலில் செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்திருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், தங்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிர்வாக சிக்கலுக்காக பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

31.05.2026 வரை இணையதளம் வாயிலாக புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்கள், 1.7.2026க்குள் கேஸ் இணைப்பு சான்றை பதிவேற்றம் செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டிருப்பது, நடைமுறையில் சாத்தியமற்றதோடு, ஏராளமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் அபாயத்தையும் உருவாக்கியுள்ளது.

குடும்ப அட்டை என்பது வெறும் நியாயவிலை கடை பொருட்களை பெறுவதற்கான ஆவணம் மட்டுமல்ல; அது கல்வி, மருத்துவம், சமூக நலத் திட்டங்கள், வருவாய் சான்று உள்ளிட்ட பல்வேறு அரசுச் சேவைகளை பெறுவதற்கான அடிப்படை ஆவணமாக விளங்கி வருகிறது. குறிப்பாக பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்கள் மற்றும் புதிதாக தனிக் குடும்பமாக பிரியும் இளம் தம்பதிகள் இந்நிபந்தனையால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகும் சூழல் உருவாகியுள்ளது.



மக்களின் அன்றாட வாழ்வை எளிதாக்க வேண்டிய அரசின் நடைமுறைகள், அவர்களுக்கு கூடுதல் சுமையாக மாறக் கூடாது. சமையல் எரிவாயு உருளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தேசிய அளவிலான சிக்கலை கருத்தில் கொள்ளாமல், அதனை குடும்ப அட்டை வழங்குவதற்கான கட்டாய நிபந்தனையாக மாற்றுவது மனிதநேயமற்ற அணுகுமுறையாகும்.

எனவே, நாடு முழுவதும் சமையல் எரிவாயு விநியோகம் சீராகும் வரை, புதிய குடும்ப அட்டை விண்ணப்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு சான்று கட்டாயம் என்ற விதிமுறையை தமிழக அரசு உடனடியாக தளர்த்த வேண்டும். மேலும், ஏற்கனவே விண்ணபித்திருப்போரின் மனுக்களை நிராகரிக்காமல், மாற்று சான்றுகளின் அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சி சார்பில் தமிழக அரசை வலியுறுத்துகிறேன் என்று பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.